# சங்க காலத்தில் ஆட்சிசெலுத்தும் நெறிமுறைகள்

*முனைவர் பெ. ராஜேந்திரன்*
தமிழ்துறை
ப.மு.தேவர் கல்லூரி, மேலநீலிதநல்லூர்
சங்கரன்கோவில், திநெல்வேலி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958617

### முன்னுரை

சமுதாயம் என்பது மக்களின் கூட்டுத்தொகுதி ஆகும். அச்சமுதாயத்தில் பல்வேறுப்பட்ட மக்கள் இனங்களும் தொழில்வயப்பட்ட பிரிவுகளும் காணப்பட்டன. அவற்றுள் சிலபிரிவினரே சமுதாய மதிப்பு மிக்கவர்களாக திகழ்கின்றனர். பண்டைத் தமிழ் சமுதாயத்தில் சமுதாய மதிப்பு மிக்கவர்களாக திகழ்ந்தவர்களுள் அரசர், அந்தணர், முனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இதில் தலையிடத்தையும், சிறப்பான இடத்தையும் பெறுபவன் அரசன். இவன் வீரத்தை அடிப்படையாகக் கொண்டு அரசுகள் நிலைபெற வேண்டிய காலகட்டத்தில் அரசனின் சிறப்பு சமுதாய மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டது. தனி மனிதரின் வலிமை, திறமை, வீரம், மனத்தின்மை ஆகியப்பண்புகளில் சிறந்து விளங்கியவன் ஆட்சி செய்யும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை பல வகுத்துள்ளன. அவற்றை பின்பற்றினால் என்னவாகும், பின்பற்றாவிட்டால் என்னவாகும் என்பதையும் ஆட்சி செலுத்தும் நெறிமுறைகள் ஆகியவற்றை சங்கப் பாடல்கள், திருக்குறள் போன்ற நூல்களில் இருந்து கீழ்கண்டவாறு காணலாம்.

### அரசனின் சிறப்புகள்

சங்க காலத்தில் மக்களின் நலன் கருதி குடியாட்சியாக இருந்தது. இதனால் பழந்தமிழகத்தில் புலவரும் மன்னரை உயர்த்திபாடினார்கள்.

**“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்** ***(புறம் 186-1.2)***

காவலன் அறநெறி பிறழ்ந்தால் இயற்கையும் முறைமை பிறழும் என்ற நம்பிக்கை இருந்தது. இதனை

**“மாரி பொய்ப்பினும் வாரிகுன்றினும்**
**இயற்கை யல்லன செயற்கையிற் தோன்றினும்**
**காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்** ***(புறம் 35)***

அரசன் நேர்மையாகவும், நீதியுடனும் ஆட்சி செலுத்தினால் மழை பெய்யும் என்பதனை

**“முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல்** ***(குறள் 559)***

அறியமுடிகிறது. மேலும் ஆட்சி செய்பவர்கள் கடவுளாக மதிக்கப்பட்டனர் என்பதனை குறள் மூலம் அறியலாம்.

***முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறையென்று வைக்கப்படும் (குறள் 398)***

பண்டைத் தமிழர் வீரம், மானம், புகழ் ஆகிய பண்புகளை உயிரினும் மேம்பட்டதாகக் கருதினர். இப்பண்புகளை காக்கும் அடிப்படையில் போர் தொடங்கியது எனலாம். மன்னரை மக்களின் தலைவனாகக் கருதியதால் அவன் பயன்படுத்திய பொருட்கள் எல்லாம் சமுதாயச் சிறப்புமிக்க தாயின. அவ்வாறு பயன்படுத்திய பொருட்களில் செங்கோல், வெண்கொற்றக்குடை, வாள், முரசு ஆகியனவாகும். அரசன் தன் செங்கோலை கையில் கொண்டிருந்தமைக்குக் காரணம் "தன் ஆளுகை அரச நீதிப்படி ஆளப்பட்டது. என்பதைத் தெரிவிக்கவாகும் இதனைக் கீழ்கண்ட பாடல் மூலம் அறியலாம்.

***"அம்புதுஞ்சுங் கடியரணால்***
***அறந்துஞ் செங்கோலையே"***
***(புறம் 20:16-17)***

***செங்கோலும் வெண்குடையும்***
***செறிநிலத்து மறிந்து வீழ்தரும்***
***(சிலம்பு 20-9)***

மன்னன் அறம் பிறழாமல் ஆட்சி செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு செய்யாவிட்டால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டுகிறது. சிலம்பில் வழக்குரை காதையில் தான் அறியாது செய்துவிட்ட தவறினை உணர்ந்த பாண்டியனின் வீழ்ச்சியினைச் செங்கோலின் தளர்ச்சி எனக் கூறுகிறது.

***"தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்***
***பொன்செய் கொல்லன் நன்சொற் கேட்ட***
***யானோ வரசன் யானே கள்வன்***
***மன்பதை காக்குந் தென்புலங் காவல்***
***என்முதற்பிழைத்தது கெடுகவென்னாயுறென***
***மன்னவன் மயங்கிவீழ்ந் தனேனே"***

என சிலம்பில் ஆட்சி செய்பவர் ஆளும் முறை ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

### பதிற்றுப்பத்தில் ஆட்சி செலுத்தும் நெறிமுறைகள்

பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தில் வென்றிக் சிறப்பு எனும் பகுதியில் செங்கோல் செலுத்தும் அரசருக்கு வேண்டப்படாத குற்றங்கள் கூறப்பட்டுள்ளன. அவை மிகுந்த கோபமும், மிகுந்த காமும், அளவில்லாத கண்ணோட்டமும், பகைவர்க்கு அஞ்சுதலும், பொய்கூறலும், பொருளிடத்து அளவுக்கு மிஞ்சிய பற்றுவைத்தலும் அளவிற்கு மிஞ்சிய தண்டனை அளித்தலும் இவை போன்றவைகளும் இவ்வுலகத்தில் அரசன் அறவழியில் ஆட்சி செலுத்துவதற்குரிய தடை கள் எனவும் இவை அரசன் அணைச் சக்கரத்திற்கு தடையாக நிற்பன என எடுத்துறைக்கின்றன. இவை இன்றைய ஆட்சியாருக்கு முற்றிலும் பொருந்தாதவையாகவே உள்ளது.

***சினனே, காமம், கழி கண்ணோட்டம்***
***அச்சம், பொய்ச்சொல், அன்புமிக உடைமை,***
***தெறல் கடுமையொடு, பிறவும், இவ்உலகத்தி***
***அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும்***
***(பதிற்றுப்பத்து - வென்றச்சிறப்பு)***

இவ்வாறு அரசர்கள் ஆட்சி செலுத்தும்போது சுயநலம் இல்லாமல் பொதுநலத்தோடு மக்களுக்காகவே உழைக்கவேண்டும் இல்லையென்றால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை மேற்கண்ட பாடல் மூலமாக அறிய முடிகிறது.

### திருக்குறளில் ஆட்சிநெறிமுறைகள்

திருக்குறளில் அரசன் படைவலிமை, நாற்குடிமக்கள், உணவுப்பொருள், நல்ல அமைச்சர், கோட்டை எனும் ஆளும் உடையவன் அரசருள் ஆண் சிங்கம் போன்றவன் எனக்கூறுகிறது.

***படைகுடி கூழ்அமைச்ச நட்பரண் ஆளும்***
***உடையான் அரசருள் ஏறு (குறள் 31)***

மேலும் அச்சமின்மை, கொடைக்குணம், அறிவுடைமை, மனவெழுச்சி, காலம் தாழ்தாமை, கல்விச்செல்வம் ஆகியவை மன்னனுக்கு இருக்க வேண்டும் எனச் கூறுகிறது.

***"அஞ்சாமை ஈகை அறிவுக்கம் இந்நான்கும்***
***எஞ்சாமை வேந்தற் கியல்பு" (குறள் 382)***

அதோடு மட்டுமல்லாமல் அறநெறியில் தவறாக இருக்கவேண்டும் என்றும் வீரத்தால் மானம் காக்க வேண்டும், வருவாய்க்கு வழிகண்டு, பொருளைத்திறம்படி காத்து, பகிர்ந்தலிக்க வேண்டும் மக்கள் காண்பதற்கு எளியவனாகவும், கடுஞ்சொல் பேசாதவனவாகவும் இருக்கும்

அரசனை உலகம் உயர்த்திப் பேசும் என குறள் மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள், மற்றும் இன்னபிற இலக்கியங்கள் அனைத்தும் அரசர்கள் அறநெறியில் ஆட்சி செய்ய வேண்டும் என்பதனையே வழியுறுத்துகிறது. இம்முறையானது சங்க காலத்தில் இருந்த மக்களுக்கு பொருந்தும் ஆனால் இன்றைய சூழலுக்கும் இந்நாட்டிற்கு இவை பொருந்தாதவையாக உள்ளது. அல்லது அப்படிப்பட்ட தலைவர்கள் அல்லது ஆட்சியாளர்கள் உருவாகவில்லை என்பதனை சங்கப்பாடல்கள் மூலம் அறியலாம். சிலப்பதிகாரத்தில் தவறான தண்டனை அல்லது தீர்ப்பு கொடுத்தவுடனே இறந்தான் பாண்டியமன்னன். ஆனால் இன்றோ கோடிக்கணக்கில் ஊழல் செய்தவன் தான் ஆட்சியாளனாக இருக்கிறார்கள். ஊழல் செய்தால்தான் ஆட்சிசெய்ய முடியும். என்ற தகுதியை இன்று உருவாக்கிட்டார்கள். என்பதனை சங்க இலக்கியங்கள் மூலம் உணரலாம்.